தரத்திலும்
மனத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே

தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12 போன்: 5830

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (18-8-65) இதழ் 187

விசுவாவசு ஆவணி 2 ரபி: ஆகிர் பிறை 20 புதன்கிழமை

26 வது ஆண்டு விழாவை
முன்னிட்டு
அரைச்சலார்
28-6-65 முதல்
கொழும்புஸ்டூடியோ
யாழ்ப்பாணம்

விதை நெல் தட்டுப்பாடு

கூழாவடி கொலை வழக்கு: 31-ந் திகதிவரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன் ஆனைக்கோட்டை கூழாவடியில் நிகழ்ந்த கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் மீது பொலிசாரினால் கைது செய்யப்பட்ட கதிரவேலு காளிமுத்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டார்.

இக்கொலை சம்பந்தமாக மேலும் விசாரணை செய்ய வேண்டியிருப்பதால், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லையென பொலிசார் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இம்மாதம் 31-ந் திகதி வரை மாஜிஸ்டிரேட் வழக்கை ஒத்திவைத்து காளிமுத்துவை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இக்கொலை சம்பந்தப்பட்ட பொருட்கள் ரசாயன பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவுடன் சிங்கப்பூர் ஒருபோதும் சேராது

வெளி மந்திரி ராஜரத்தினம் அறிவிப்பு

சிங்கப்பூர், ஆக. 17

மலேஷியாவுக்கெதிராக இந்தோனேஷியாவுடன் சிங்கப்பூர் சேராது என வெளி நாட்டுமந்திரி திரு. ராஜரத்தினம் கூறினர்.

மலேஷியாவுக்கெதிராக சிங்கப்பூர் தனது நாட்டுடன் சேரும் என இந்தோனேஷியா தனது சுதந்திர தினத்தில் அறிவித்ததை மறுக்குமுகமாகவே திரு. ராஜரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

இது தப்புக் கணக்கு என்றும் மலேஷியா சிங்கப்பூருடன் பலவகைகளில் பிணைக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் மேலும் கூறினர்.

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ சுதந்திர தின வைபவத்தில் பேசியபோது, சிங்கப்பூர் விலகியதைப் போல மலேஷியாவிலிருந்து இதர பிரதேசங்களும் விலகும் என்றும், இந்தோனேஷியாவின் மலேஷிய எதிர்ப்புக் கொள்கை பலனளித்து வருவதையே சிங்கப்பூரின் விலகல் பிரதிபலிக்கிறதென்றும் கூறினர்.

இந்தக் கொள்கை தொடர்ந்து நீடித்து வரும் என்றும் டாக்டர் சுகர்ணோ கூறினர்.

சேர் சார்ஜ் வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட 'சேர்சார்ஜ்' வழக்கை மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் தள்ளுபடி செய்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கிளப்பிய சட்டப்பிரச்னை காரணமாகவே நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தார்.

இவ்வழக்கில், மாநகர சபை உறுப்பினரான திரு வாளர்கள் அல்பிரட் துரையப்பா, பி. தெய்வேந்திரன், எஸ். நடராசா, எம். எம். சுல்தான் ஆகிய நால்வர் மீதும் கேள்விப்பத்திரத்தை ஏற்றது சம்பந்தமாக 4905 ரூபாவிற்கு சேர் சார்ஜ் கோரப்பட்டிருந்தது.

பிரதிவாதிகள் சார்பில் திரு. எஸ். சி. கதிரவேலு, திரு. வி. நடராசாவின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

மகாகும்பாபிஷேகம்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பு நகரின் மத்தியில் உள்ள மிகப் பழமை வாய்ந்த ஆனைப் பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் கோவிலில் ஆவணி 23-ந் திகதி (8-9-65) புதன் கிழமை மகாகும்பாபிஷேகம் நடத்த கோவில் புனருத்தாண சபையினரால் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஆக்கவேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தலை சிறந்தசிற்பாசாரியர்களால் கோவில் திருத்திப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

லண்டனில் ஜமாய்க்கா கோஷ்டி

லண்டன், ஆக. 17

பிரிட்டிஷ் காமன்வெல்த் குடியேற்றக் கொள்கை பற்றி விவாதிக்குமுகமாக ஜமாஸ்க்காவிலிருந்து தூது கோஷ்டி ஒன்று லண்டன் வந்திருக்கிறது.

காஷ்மீர் பற்றி யுதாண்ட் கவலை

நியூயோர்க், ஆக. 17

காஷ்மீரில் ஊடுருவல் நடைபெற்றிருப்பது குறித்து ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பாகிஸ்தான் பிரதிநிதியிடம் இன்று கவலைதெரிவித்தார். காஷ்மீர் எல்லைக்கோடு மீறப்பட்டிருப்பது குறித்தும் அவர் தனது கவலையைத் தெரிவித்துக்கொண்டார்.

பாகிஸ்தான் அரசாங்கத்திடம் தமது இக்கருத்தைத்தெரிவிக்குமாறு அந்நாட்டுப் பிரதிநிதியை யுதாண்ட் கேட்டுக் கொண்டார்.

அதன் பின் இந்தியப் பிரதிநிதியை அவர் சந்தித்தார்.

சிறுவனின் துணிகரத் திருட்டு

கச்சாய், செவ்வாய்

பதின்மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் பட்டப்பகலில் கடைக்காரருக்குத் தெரியாமல், ஐம்பது ரூபா பெறுமதியான சிகரட் பாக்கட்டுகளை துணிகரமாகத் திருடிச் சென்ற சம்பவமொன்று கொடிகாமத்தில் நடந்துள்ளது. கொடிகாமம் லெ. சேகுதாவுது என்பவரின் கடைக்குச் சென்று அவருக்குத் தெரியாமல் இரு பெரிய சிகரட் பெட்டிகளைத் திருடிச்சென்ற இச்சிறுவன், மறுமுறையும் அக்கடையில் சிகரட் பெட்டிகளைத் திருடச் சென்றபோது கடைக்காரரிடம் அகப்பட்டுக்கொண்டதாகவும், கடைக்காரர் இச்சிறுவனை கிராமசேவகரிடம் ஒப்படைக்க முயன்றபோது, யாருக்கும் தெரியாமல் நழுவிவிட்டதாகவும் தெரியவருகிறது.

இன்று நல்லூர் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

பகல் உற்சவம் - பச்சை மயில்.

இரவு உற்சவம் - பெரிய இடும்பன்.

திருப்புகழ் மண்டபம் - இசையரங்கு: பிரம்மஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமிசர்மா பாட்டு, திரு. ரி. சி. பிச்சையப்பா - வயலின், திரு. ரி. ஜெயசுந்தரம் - மிருதங்கம்.

கந்தபுராண விரிவுரை - திரு. சி. எஸ். எஸ். மணி பாகவதர் - சிங்கமுகாசுரயுத்தம்.

யாழ்ப்பாண குடாநாட்டு விவசாயிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயிகள் விதை நெல்லைச் சேமித்துவைக்காததன் காரணமாக மிகவும் கஷ்டமேற்பட்டுள்ளது. ஒரு புசல் நெல் கூடுதலான விலையில் விற்பனைசெய்யப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி, கண்டாவளை முதலிய இடங்களுக்கு வேண்டிய நெல்லை விவசாயப்பகுதியினர் சேகரித்து வைத்துள்ளார்கள். வேண்டிய நெல்லை இப்பகுதியிலுள்ளவர்கள் பயிர்ச் செய்கைக் குழு ஊடாக புசல் ஒன்றிற்கு 12 ரூபா 40 சதத்திற்குகமத்தொழில் உதவி ஆணையாளர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்காக நாற்பதாயிரம் புசல் நெல் விவசாயப்பகுதியினரால் சேமிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வேண்டிய விதை நெல்லு வேறு தரத்தைச் சேர்ந்தால் அந்த ரகத்தைச் சேர்ந்த நெல்லை விதைப்பதற்காகச் சேகரித்து வைக்கும்படி இவ்வாண்டின்முதற் பகுதியில் விவசாயப்பகுதியினர் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுத்திருந்தனர். ஆனால் விவசாயிகள் கவனத்தில் எடுக்காததால் விதைநெல்லுக்கு யாழ்ப்பாணக்குடாநாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. "கிளிநொச்சி கண்டாவளை பகுதிக்கு விதைக்கப்படும் 'ஏச்-4' என்ற நெல்லைத்தான் இம்முறை யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் விதைக்க வேண்டும் இந்தவகைநெல்போதிய அளவுஉண்டு' என்று விவசாயப்பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மலையேறும் கோஷ்டி

பெர்லில், ஆக. 17

சோவியத் யூனியன், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லாவகியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அல்பயின் மலைகளில் ஏறி அனுபவம்பெற்ற 10 மலையேறிகள், படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர்களைக்கொண்ட ஒரு கோஷ்டி, மத்திய ஆசியாவில் புக்காரா, சமர்கண்ட், சீலா ஆகிய இடங்களிலுள்ள கலாசார நிலையங்களையும், பாமிர்ஸ் மலைத்தொடரில் இதுவரை மனிதஅடிபடாத மலைகளையும் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

'ஊடுருவல்காரர்'

ஸ்ரீநகர், ஆக. 16

காஷ்மீரில் "ஊடுருவல்" செய்த பாகிஸ்தானியர்கள் இந்தியப் படைகளின் தீவிர நடவடிக்கைகளினால் நாலா புறமும் சிதறுண்டு இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இரு மந்திரிகளின் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், புதன்

உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா; வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகமது ஆகியோர் 21-ம் திகதிசனிக்கிழமை காலை பலாலிவிமான நிலையத்தை வந்தடைவார்கள். அங்கிருந்து ஊர்வலமாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட புதிய செயலகத்தை திரு. தகநாயக்கா திறந்த வைப்பார். நண்பகல் 12-00 மணிக்கு, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உள்நாட்டு மந்திரி திரு. தகநாயக்காவிற்கும், வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகமதுவுக்கும் விருந்தளிப்பார்.

பிற்பகல் 4மணிக்கு உடுப்பிட்டித்தொகுதியில் பொதுமக்கள் சார்பில் மந்திரிகளுக்கு வரவேற்பு அளிக்கப்படும். மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவிருக்கும் குடியேற்றத் திட்டங்களுக்கு திரு. முகமத் அத்திபாரக்கல் நாட்டுவார். அதன்பின் விசேஷ விமானத்தில் கொழும்பு திரும்புவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நமக்குள் கோவில் கொண்டிருக்கும் ஆண்டவனை மனக்கண்ணுல் காணப்பெறுங் காட்சியே பக்தி என்பது. அந்தக்காட்சி பெற்றவர் உடல் நோய் பட்டிருந்தாலும் உள்ளம் நோயற்ற பூரண ஆரோக்கிய நிலையிலிருக்கும். பரம ஏழையாக இருந்தாலும் குறைவற்ற ஆன்மசம்பத்தை அனுபவிப்பான்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 2 வ (18-8-65)

இலங்கை வானெலி ஒலிபரப்பு!

இலங்கை வானெலி, அரசாங்க தகவல்சேவை, திரைப்படப்பிரிவு ஆகியவைகளை அபிவிருத்திசெய்வது சம்பந்தமாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷனின் முதல் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இச்சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கான யோசனைகளை பொதுமக்களிடமிருந்து பெறுவதற்கு கமிஷன் விருப்பம் தெரிவித்துள்ளது. நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. பொதுமக்கள் தவறவிட்டுவிடக்கூடாது.

இலங்கை வானெலியைப்பற்றிப் பொதுவாகக் குறை கூறப்படுவதுண்டு. நிகழ்ச்சிகளின் தரம் ஒருபுறமிருக்க நாட்டின் சகல பகுதிகளிலு முள்ள மக்கள் வானெலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்க முடிவதில்லை யென்பது பெரிய புகார். இலங்கையில் குறிப்பாக வடக்குப் பகுதியில் வாழும் மக்கள் இரவில் ஒன்பது மணிக்கு மேல் இலங்கை வானெலிநிகழ்ச்சிகளைக் கேட்க முடிவதில்லை. இக்குறையை நிவர்த்தி செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு வானெலி நிலையம் அமைக்கலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. பூரண வசதியுள்ள வானெலிநிலையம் அமைப்பதில் சிரமம் இருந்தால் இங்குஓர் அஞ்சல் நிலையத்தையோ, ஒலிப்பதிவு நிலையமொன்றையோ அமைக்கலாமென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதி மக்கள் வானெலி நிகழ்ச்சிகளைத் தெளிவாகக்கேட்க முடிவதுடன் இங்குள்ள கலைஞர்கள் கொழும்புக்குச் சென்று நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால் ஏற்படும் சிரமங்களையும் செலவுகளையும் தவிர்க்க முடிவதுடன் திறமை வாய்ந்த இதர கலைஞர்களும் தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பும் கிடைக்கும். முன்னைய அரசாங்கம் செங்கடகலையில் அஞ்சல் நிலையம் ஒன்றை ஆரம்பித்ததுடன் தேர்தல் காலத்தில் அநுராதபுரத்திலும் ஓர் அஞ்சல் நிலையத்தை அமைத்தது. என்ன காரணத்துக்காகவோ இப்பகுதி பொதுஸ்தாபனங்களினதும் கலைஞர்களினதும் பொதுமக்களினதும் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. இப் பொழுது விசாரணைக்கமிஷன் நியமிக்கப்பட்டிருப்தால் நீண்ட நாளையக் கோரிக்கையை வற்புறுத்தி இப்பகுதியில் ஒரு வானெலி நிலையத்தை அமைக்க பொதுமக்கள் முயற்சி செய்ய வேண்டும்.

இலங்கை வானெலி ஆரம்பிக்கப்பட்டபின்னர்தான் இந்தியாவில் ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதன் வளர்ச்சியுடன் இலங்கை வானெலியை ஒப்பிட்டுப்பார்க்கவேமுடியாது என்பது உண்மை. நாள் முழுவதும் திரைப்படத்தட்டுக்களையே நிகழ்ச்சிகளுக்கு நம்பியிராமல் நாட்டின் பலபாகங்களிலு முள்ள கலைஞர்களைப் பயன்படுத்தி 'உயிருள்ள' நிகழ்ச்சிகளை அளிக்க வேண்டும். இதற்கான யோசனைகளைக் கலைஞர்களும் கலாரசிகர்களும் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இலங்கை வானெலியில் செய்தி அறிவிப்பும் போற்றக்கூடிய முறையில் இல்லை. தமிழ் மொழி பெயர்ப்பும் சில சமயங்களில் கேலிக்கிடமாகின்றது. இவற்றையும் திருத்தியமைக்க வழிகாண வேண்டும். காலையில் இந்திய வானெலியில் தமிழ்ச் செய்தி ஒலிபரப்பப்படும் சமயத்தில் இலங்கை வானெலியும் தமிழில் செய்தி அறிக்கையை ஒலிபரப்புகிறது. இந்த முறையை மாற்றி முன்னர் போல் காலை ஏழு மணிக்கே செய்தியை ஒலிபரப்புவது நல்லது. வெளி நாட்டுச் செய்திகளுக்கு முக்கியத்துவமளிப்பதைக் குறைத்து உள்நாட்டுச் செய்திகளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும். இதற்கு அரசாங்க தகவல் பகுதியையும் சீர்திருத்தி அமைக்க வேண்டியது அவசியம்.

இப்பொழுது இலங்கை வானெலி அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் கட்டுப்பாடுகள் அதிகமாக இருக்கிறது. இதை மாற்றி மக்களுக்கு நன்கு பயன்படக் கூடிய முறையில் இலங்கை வானெலி இயங்கவேண்டும். இதற்கு ஓரே வழி லண்டன் பி. பி. ஸி. போன்று இங்கும் வானெலிச் சேவையை ஒரு கூட்டுஸ்தாபனத்திடம் ஒப்படைப்பதுதான். விசாரணைக் கமிஷன் இவற்றைக் கருத்தில் கொள்ளுமென எதிர்பார்க்கிறோம்.

தமிழரசுக் கிளை

நெடுங்கேணி, செவ். இலங்கைத் தமிழரசுக் கட்சி நெடுங்கேணி கிளை ஆரம்பக்கூட்டம் திரு. நா. கிருஷ்ணபிள்ளை தலைமையில் கூடியபொழுது கீழ்க்கண்டோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. செ. சரவணமுத்து, உபதலைவர்: திரு. து. தளையசிங்கம். செயலாளர்: திரு. த. ம. பீற்றர் பொன்கலன்ட், உதவிச்செயலாளர்: திரு. கி. கனகரத்தினம், பொருளாளர்: திரு. ப! வேலுப்பிள்ளை, உதவிப் பொருளாளர்: திரு. த. ம. தேவா. திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், உள்ளூர் ஆட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் ஆகியோருக்கும் வடக்கு கிழக்குப் பகுதியைச் சேர்ந்ததமிழரசுப்பிரமுகர்களுக்கும் கட்சிச் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் ஓர்வரவேற்புபசாரம் நடாத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மனவளர்ச்சியற்ற குழந்தைகள் பிரச்னை

யாழ்ப்பாணம், புதன் "மனவளர்ச்சியடையாத குழந்தைகள் எந்தக் குடும்பத்திலும் பிறப்பார்கள். ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், யாருடைய குடும்பத்திலும் பிறக்கலாம். இவர்களின் பிரச்சினை சமூகத்தின் பிரச்சினையாகும். பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக வைத்தியர்களும் ஆசிரியர்களுமே இக்குழந்தைகளைக் கவனிக்க வேண்டும்,"

இலங்கை-அமெரிக்க கலாச்சார நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை 'மனவளர்ச்சியடையாத குழந்தைகள்' என்னும் விஷயம்பற்றி நடந்த கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த பிரதம பாதுகாப்பு அதிகாரி திரு. ஆர். ஸி. ஜி. டானியல் தலைமையுரையில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை ஆசிரியை செல்வி எல். ஆர். தவரத்தினசிங்கம், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எச். ஏ. டீ. வீரசூரியா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

திரு. டானியல் மேலும் கூறியதாவது:-

மனவளர்ச்சி, வைத்தியப்பிரச்னையிலும் பார்க்க சமூகப்பிரச்னையாகவே அதிகம் காணப்படுகிறது. சில வருடங்களுக்கு முன் மனவளர்ச்சியடைந்த குழந்தைகள்பற்றி அதிகம் அறிந்திருக்கமுடியாது. தற்பொழுது அக்குழந்தைகளுக்கு அதிக வசதியளிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் பல ஸ்தாபனங்கள் இக்குழந்தைகளுக்கு உதவியளித்துவருகின்றன. அங்கு ஒவ்வொரு 100,000 குழந்தைகளுக்கு வைத்திய சாலைகளும், வீடுகளும், வேலை அளிக்கும் நிலையங்களும் உண்டு. இக்குழந்தைகளைக் கவனிப்பதிலும் கல்வி அளிப்பதிலும், கவனம் செலுத்தவேண்டும்.

டாக்டர் வீரசூரியா கூறியதாவது:-

எனது வைத்தியத்துறையில் இவ்விஷயம் முக்கிய பங்காக இருக்கிறது. இக்குழந்தைகள் விஷயத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும், போதிய மனவளர்ச்சியின்மையும், மூளை சரியான நிலையில் இருக்காததும். மத்திய நரம்புகளில் உள்ள மாற்றமுமே குழந்தைகள் மனவளர்ச்சியடையாமைக்குக்காரணம். மனவளர்ச்சியும், உடல்வளர்ச்சியும் சமூகவளர்ச்சியும் குழந்தைகளுக்கு அவசியம். உடல்வளர்ச்சியை நாம் குழந்தைகள்பிறந்தது முதல் காணமுடியும். சமூக,உடல், மனவளர்ச்சிகளுக்குத் தொடர்புண்டு. உடலின் உயரத்தையும், பருமனையும் அளப்பதுபோல, மனவளர்ச்சியையும் நாம் புத்தியின் மூலம் ஓரளவு அளக்கலாம். ஞாபகத்தை புத்திக்கூர்மை என்று கூறமுடியாது. புத்திக்கூர்மையை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று கல்வியறிவு. மற்றது சாதாரண வாழ்க்கையறிவு. வாழ்க்கை அறிவை அளவெடுப்பது மிகவும் கஷ்டமானது.

செல்வி எல். ஆர். நவரத்தினசிங்கம் கூறியதாவது:-

மனவளர்ச்சியடையாத குழந்தைகளை எந்தக்குடும்பத்திலும் காணலாம். காலம்சென்ற அமெரிக்க ஜனாதிபதி கெனடியின் சகோதரியொருவரும், மனநிலையால் பாதிக்கப்பட்டிருந்தார்.

மனத்தத்துவ வைத்தியர்கள் மூலம் பரிசோதனை செய்யவேண்டும். குழந்தைகளின் நடவடிக்கைகளை கவனிப்பதன் மூலம், மனவளர்ச்சியை அறியலாம். இக்குழந்தைகள் எக்காரியத்தையும் செய்யத் தவறுவார்கள். ஒரு பொருளின் உபயோக மட்டுமே அவர்களுக்கு தெரியும். அப்பொருளைப்பற்றி வேறெதுவும் அறிந்திருக்க மாட்டார்கள். ஒரு முழுவசனத்தின் கருத்தைக் கேட்டால் கூறமாட்டார்கள். ஆனால், அவ்வசனத்தில், ஒவ்வொரு சொற்களுக்கும் தனித்தனியே கருத்து கூறுவார்கள்.

அன்னதான சபை

ஊர்காவற்றுறை, செவ், சரவணையில் ஸ்ரீ செல்வக்கதிர்காமசுவாமி தேவஸ்தான அன்னதான சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பின்வருபவர்கள் நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சு. சிவசம்பு, உபதலைவர் திரு. கே. தம்பாபிள்ளை, காரியதரிசி திரு. படிகலிங்கம், உபகாரியதரிசி திரு. செ, பொன்னுத்துரை, தனாதிகாரி திரு. நா. தம்பியையா. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு ஆதரவு

பம்பலப்பிட்டி, செவ். ஸ்ரீ லங்கா சுதந்திரசோஷலிஸ்ட் கட்சியும் லங்கா பிரஜா தந்திர வாதிகட்சியும் அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு கொடுப்பதெனத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

"மங்கள வாத்திய விசாரத்" ஷேக் சின்னமவுலானவும் அவருடன் சேர்ந்து வாசித்தஹஸன்சாகிபும் தங்கள் நாகசுரவாத்தியத்திலே தந்தத்தில் செய்யப்பட்ட கலாதேவியான சரஸ்வதியின் திருவுருவத்தை இணைத்திருப்பதைக் கண்டேன். கலாதேவியிடம் இஸ்லாமியரான அவர்களுக்குள்ள பக்திக்கு அது ஓர் அத்தாட்சியாக இருந்தது, கலைஞர்கள் சாதி, சமயம் முதலிய வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டவர்களல்லவா? ஆந்திரத்தைச் சேர்ந்த இக்கலைஞரை, இப்போதுதமிழ்நாட்டில் பல திருவிழாக்களில் வாசிக்க அதிகமாக அழைக்கின்றார்களாம்.

கோவில் திருவிழாக்களில் வாசிக்க ஆரம்பித்தது முதல் அவர் சுத்த போசனம்தான். இது தெரியாமல் கொழும்பிலே ஓர் அன்பர் வேறு ஏதேதோ செய்து விருந்து வைத்தாராம். ஆனால் அவர் சைவ உணவுதான் சாப்பிட்டதாக அறிந்தேன். அவர் ஏற்கெனவே தமது வாத்தியத்தில் இரு பெரிய தங்க மெடல்கள் கோர்த்திருந்தார். அன்று ஆடிவேல் விழாவில், சம்மாங்கோட்டார் ஒரு புதிய தங்கப்பதக்கத்தை பலத்த கரகோஷத்திடையே அளித்தனர்.

அவரும் அவரது கோஷ்டியினரும் சென்ற ஞாயிறன்று சென்னைக்குத் திரும்பினர்.

❊ ❊ ❊

செல்லூர் கொடியன் சிவன் பெருங்கோயில் சிவபுரமும், வல்லேன் புகவும் மதில்சூழ் இலங்கையர் காவலனைக், கல்லார் முடியொடு தோளிறச் செற்ற கழலடியான், நல்லூரிருந்த பிரானன்னவே நமை ஆழ்பவனே.

—அப்பர் சுவாமிகள்.

ஐயாறன் எழுதுவது

சின்ன மவுலானவை இம்முறை எப்படி வரவழைத்தீர்கள் என்று சம்மாங்கோட்டு கோவில் நிர்வாகியைக் கேட்டேன். "எல்லாம் அந்த முருகன் தான் கொண்டுவந்தார்" என்று மிக அடக்கமாகச் சொன்னர் அவர்.

சென்ற 40 வருடங்களுக்கு மேலாக ஆடிவேல் (காவடி) திருவிழாவை மிகச் சிறப்பாக நடாத்திவரும் சம்மாங்கோட்டார் என்பவர் கள், தஞ்சாவூரைச் சேர்ந்த அரிசி, ஐவுளி வியாபாரிகளாவர். சென்ற புதிய சட்டதிட்டங்கள் காரணமாக, அவ்வியாபாரிகளில் பெரும்பாலாலோரும் திரும்ப நேரிட்டது. இனி இக்கோவிலும், திருவிழாவும் நடக்குமா, எப்படி நடக்கும் என்று பலரும் நினைத்திருக்கையில், இப்புனித பணியைச்செய்ய இங்குள்ள பிரஜைகளாகியுள்ள பல வர்த்தக அன்பர்கள் கோயில்நிர்வாகத்தை ஏற்று, இத்திருவிழாவை முன்னிலும் மேலாக நடத்த எல்லா முயற்சிகளையும் செய்துள்ளனர்.

❊ ❊ ❊

சென்ற இரண்டு வருடங்களாக தமிழகத்திலிருந்து, கலைஞர்கள் யாரும் வரப்படாதென்று தடையிருந்தது. டயஸ் தர்பார் நீடித்திருந்தால் இம்முறையும் ஷேக் வந்திருக்கமுடியாது.

இந்தக் கலைஞர்களுக்கு எவ்வளவு சன்மானம் கொடுத்தீர்கள், எக்ஸ்சேஞ்ச் ஏதும் அனுமதித்தார்களா என்று விசாரித்தில், சல்லி ஒரு சதமும் எக்சேஞ்ச் கிடைக்கவில்லை என்று தெரிந்தது.

❊ ❊ ❊

ஆடிவேல் திருவிழாவை இவ்வளவு சிறப்பாக நடத்த சம்மாங்கோட்டார் எடுத்துள்ள முயற்சிகளுக்காக ஸ்ரீகாந்தா அவர்கள் மக்கள் சார்பாக அவர்களை நன்றியுடன் பாராட்டினர். இந்தியக் கலைஞர்கள் இங்கு தொடர்ந்து வரவேண்டுமென்றும், இந்தத் தொடர்பு இங்கு கலைகள் வளர உயிர்போன்றதென்றும், கலை விஷயத்திலே தமிழருக்கு சாதி, சமயம் முதலிய வேற்றுமைகள் எதுவும் கிடையாதென்றும், அன்றைய பெருங்கூட்டத்தில் கூறி, மூன்று தவில் வித்வான்களுக்கும், ஈழத் தொடர்பு உள்ளதைப் பற்றியும் சொன்னபோது, பல்லாயிரக்கணக்கான மக்களும் மகிழ்ச்சியுடன் பலத்த கரகோஷம் செய்தனர்.

இந்தியக் கலைஞர்கள் வருவதற்கு சில ஆட்சேபம் எழுந்ததாயும், அந்த விஷயத்தையும் மிகச் சுமுகமாகக் கோவில்நிர்வாகிகள் தீர்த்து, இருதேச வித்வான்களையும் நன்கு கௌரவித்தாயும் அறிய மகிழ்ச்சியாக இருந்தது. சென்ற இரு வருடங்களாக இலங்கைக் கலைஞர்களும் சென்னைக்குச் செல்லமுடியவில்லை. அங்கிருந்தும் இங்கு வரமுடியவில்லை. செலாவணி என்ற ஒரு காரணம் சொல்லிக் கலைஞர்களுக்குப் போட்டுள்ள இந்த இரட்டைத் தாழ்ப்பாள் நீங்க வேண்டும். தமிழர்களுக்கு மாறுக டயஸின் கொடுங்கோல் ஆட்சியிலே எடுத்த இந்த அநியாய நடவடிக்கையை அடியோடு நீக்கவும், இரு தேச உறவுகளும் ஒங்கவும், சிறப்பாகத் தமிழரும், தமிழ்ப்பிரதிநிதிகளும் தீவிர முயற்சிகளைச் செய்யவேண்டும்.

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஷ்மீர் போர்நிறுத்த எல்லைக்கோட்டை இந்தியத் துருப்புக்கள் தாண்டின

இருபாகிஸ்தான் காவல்நிலைகள் பிடிபட்டன; எல்லையில் எதிர்த்துருப்புகள் அணிவகுப்பு

ஸ்ரீநகர் - லே ரஸ்தாவை பாதுகாக்க நடவடிக்கை

ஸ்ரீநகர், ஆக.17

கார்க்கில் பகுதியில் காஷ்மீர் போர்நிறுத்தக்கோட்டை தாண்டி இருபாகிஸ்தான் நிலைகளை இந்தியா கைப்பற்றியிருப்பதாயும், ஸ்ரீநகர்-லே கேந்திர ரஸ்தாவைப் பாதுகாக்குமுகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது. (முன்பு இந்தியா, கைப்பற்றியிருந்த இந்த நிலைகள் கட்சி ஒப்பந்தத்தின்போது ஐ. நா. உத்தரவாதத்தின் மீது பாகிஸ்தானிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.)

80 ரூத்தல் குண்டுகள்

அதேசமயம் போர்நிறுத்த எல்லைக் கோட்டின் சில அரங்குகளில் முறையான பாகிஸ்தான் துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றும், எல்லைக் காவலை அவர்கள் ஏற்றிருக்கிறார்கள் என்றும், எல்லைக்கப்பாலிருந்து நடுரக பீரங்கிகளையும், கனரக மோட்டார்களையும் உபயோகித்து பாகிஸ்தானியர் சுட்டு வருவதாயும், 80 ரூத்தல் குண்டுகளை அவர்கள் உபயோகிப்பதாயும் மேலும் கூறப்படுகிறது.

திருப்பிச் சுட்டத்தில் ஒரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டார் என்றும், பாகிஸ்தான் தரப்பில் ஒரு பாலம் சேதமடைந்த தென்றும், மற்றேரிடத்தில் பாகிஸ்தான் சப்பை கிடங்கொன்றுக்கு பெருஞ் சேதம் ஏற்பட்டதென்றும் தொடர்ந்து கூறப்பட்டது.

முழுப்பொய்

பாகிஸ்தானியர் ஸ்ரீநகர் லேசாலையைத் துண்டிக்க பலமுறை எடுத்துக்கொண்டமுயற்சிகள் முறியடிக்கப்பட்டன என்றும், அவர்கள் இதைத் துண்டித்துவிட்டதாகக் கூறுவது முழுப் பொய் என்றும், போக்குவரத்து வழக்கம்போல் நடைபெற்று வருகிறதென்றும் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினர்

14பேர் கைது

கார்க்கில் பாகிஸ்தானியர் ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டது என்றும், 14 ஊடுருவல்காரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும், இவர்கள் தங்கள் ஆயுதங்களை நதியில் எறிந்தபின் உடை மாற்றிக் கொண்டிருந்த போது பிடிக்கப்பட்டார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

மற்றேரிடத்தில் 4 பாகிஸ்தானியர் சுட்டுக்கொல்லப்பட்டு, மூவர் காயப்படுத்தப்பட்டனர்.

மந்திரிசபை பரிசீலனை

காஷ்மீரில் ஏற்பட்டுள்ள புதியநிலை பற்றி நேற்று மந்திரிசபையின் நெருக்கடி காலக்கமிட்டி ஆராய்ந்தது. காஷ்மீர் நிலைமை அபாய விளைவுகளை ஏற்படுத்துமென்றும், இந்த ஊடுருவலுக்கு பாகிஸ்தானில் உயர்வட்டாரம் அங்கீகாரம் அளித்திருக்கிறதென்றும் திரு சாஸ்திரி அப்போது கூறினர். ஊடுருவல் காரர்களைப் பிடிக்க காஷ்மீர் அரசாங்கமும், மக்களும் தீவிரமாக ஒத்துழைத்து வருவதாயும் அவர் குறிப்பிட்டார்.

சீனர்களும் இருக்கிறார்கள்

திரு சாவன் பேசும்போது பாகிஸ்தானின் இரு முனைகளிலும் சீனர்கள் காணப்பட்டுவருகிறார்கள் என்றார். ஊடுருவல் காரர்கள் சிவிலியன்கள்போல் உடையணிந்து ஊடுருவல் நடத்தியிருப்பதாயும்ஜூட்டமிட்டஇந்த நடவடிக்கையை ஸ்ரீநகருக்கு வெளியிலேயே தடுத்து நிறுத்திவிட்டதால் அவர்களின் லட்சியத்தை அடைய முடியவில்லையென்றும் அவர் மேலும் கூறினர்.

யுதாண்ட்

நேற்று நியூயோர்க்கில் ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் இந்திய, பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதிகளை தனித் தனியே சந்தித்து காஷ்மீர் பற்றி விவாதித்தார்.

ஹொலிவுட் உட்பட பல இடங்களில் நீக்ரோக்கள் கலகம்

லொஸ் ஏஞ்சல்ஸில் நிலைமை திருப்தி

லொஸ்ஏஞ்சல்ஸ், ஆக. 17 தன.

லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் 6 நாள் நடைபெற்ற கலகம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாயும், நிலைமை கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாயும் கவர்னர் பிரௌன் அறிவித்தார்.

ஆனால் அவர் இத்தகவலை அறிவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் நகரின் புறப்பகுதிகளிலும், ஹாலிவூட் உட்பட கலிபோர்னியாவின் இதர பகுதிகளிலும் புதுத் தாக்குதல்கள், கொள்ளை ஆகியனபற்றிச் செய்திகள் வர ஆரம்பித்தன.

15000 நீக்ரோக்கள் தாக்கிவிட்டு ஓடும் யுக்தியிலும், கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டது.

லொஸ்ஏஞ்சல்ஸ் கலகத்தில் 32 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 750 பேர் காயமடைந்தனர் என்றும் 2000 நீக்ரோக்கள் கைதாயினர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

நேற்று பல இடங்களில் நீக்ரோக்கள் ஓடும் கார்கள் மீது பெட்ரோல் குண்டு வீசினர்கள்.

வடவியட்னும் ஏவுகருவி தளத்தின் புகைப்படம்

அமெரிக்கா வெளியிட்டது

வாஷிங்டன், ஆக, 17

வடவியட்னும் ஏவுகருவித்தளம் ஒன்றை அமெரிக்கா பிடித்துள்ள படம், பாதுகாப்பு இலாகாவால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த ஏவுகருவி ராக்கெட்டுகளை 24 மணி நேரத்தில் எங்கும் சுலபமாக அகற்ற முடியும் எனக் கூறப்படுகிறது.

தென்வியட்னமில் டியூஹோ தளத்தை வியட்காங்கியர் தொடர்ந்து நெருக்கி வருகிறார்கள் என்றும் புதிய துருப்புக்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஹானோயில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தென்வியட்னமுக்கு தொண்டர்கள் செல்லத் தயாராய் இருக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது,

நேற்று சைகோனில் பொலிஸ் தலைமை நிலையத்தை குண்டுவீசித் தாக்கியவர்களைக் கண்டுபிடிக்கும் புலன்விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இத் தாக்குதலில் 4 பொலிசார் கொல்லப்பட்டனர்.

ஐ. நா. பங்கு பணத்தை யு. எஸ். வற்புறுத்தாது

வாஷிங்டன், ஆக. 17

ஐ. நா. சமாதானப் பணிக்கு பங்குப் பணம் செலுத்தாத நாடுகளுக்கு பொதுக் சபையில் ஓட்டுரிமையை இழக்கச் செய்வதை, அமெரிக்கா இனி வற்புறுத்தாது என அறிவிக்கப்பட்டது. இந்த மனமாற்றம் காரணமாக அடுத்த மாதம் ஐ. நா. பொதுச்சபை வழக்கம் போல் கூடுவதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது.

ஐ. நா. வின் வேலைகளை ஸ்தம்பிதப்படுத்த அமெரிக்கா விரும்பவில்லை என அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்பர்க் கூறினர்.

தென்னமெரிக்க புயலுக்கு 160 பலி

லண்டன், ஆக. 17

தென்னமெரிக்காவில் ஏற்பட்ட பயங்கர புயல், கடல் கொந்தளிப்பு காரணமாக 160 பேர் மாண்டனர்.

சிலி நாட்டில் 40 சதவிகித விளை நிலங்கள் அழிந்தன. 3 பெரும நகரங்கள் முற்றுகைக் கை விடப்பட்டன.

அர்ஜண்டீனாவில் 40 பேர் கடலுக்குள் மறைந்தனர்.

சந்திரனில் பெருங் கண்டம்

மாஸ்கோ, ஆக. 17

சந்திரனின் மறுபக்கத்தில் பிரமாண்டமான ஒரு கண்டம் இருக்கிறதென்றும் நூற்றுக்கணக்கான வெடிப்புக்களும், மலைகளுக்கிடையே கடலும் இருப்பதாக ரஷ்யா எடுத்த சந்திரனின் புகைப்படம் எடுத்துக் காட்டியுள்ளது.

அயூப் வாழ்த்து

ராவல்பிண்டி, ஆக, 17

இந்தோனேஷியாவின் 20-வது தேசீய தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், ஜனாதிபதி சுகர்னோவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

"இந்தியர்கள் கனரக பீரங்கி படையை கொண்டுவந்திருக்கிறார்கள்"

முஸ்லீம் நாடுகளின் உதவியை ஊடுருவாளர் கோருகின்றனர்

கராச்சி, ஆக. 17

காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும்பொருட்டு, இந்தியர்கள் கனரக பீரங்கிப்படையைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும், இந்தியர்களின் மிருகத்தனத்தை எதிர்க்கும்பொருட்டு முஸ்லிம் நாடுகள் விடுதலை வீரர்களுக்கு உதவவேண்டும் என்றும் 'காஷ்மீரின் குரல்' என்ற வானொலி விண்ணப்பித்திருக்கிறது.

ஸ்ரீநகர் துண்டிப்பு

அதேசமயம் 'காஷ்மீர் விடுதலைவீரர்கள்' ஸ்ரீநகரின் புறப்பகுதிகளை ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்றும், ராஜ்யத்தின் இதர பகுதிகளிலிருந்து ஸ்ரீநகர் துண்டிக்கப்பட்டுவிட்டதென்றும் டெலிபோன், தந்திதொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன என்றும் அது மேலும் அறிவித்தது.

இந்தியர்கள் ஸ்ரீநகரில் உள்ள தங்கள் துருப்புக்களுக்கு விமானங்கள் மூலம் சப்ளைகளை போட்டுவருகிறார்கள். அதேசமயம் பலமான பீரங்கிப்பிரயோகம் செய்துவருகிறார்கள் என்றும் அது கூறியது.

நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர்

நேற்றைய சண்டையில் ஓரிடத்தில் 135 இந்தியர்கள் கொல்லப்பட்டோ, காயமடைந்தோ போயினர். 10 வாகனங்களும், 8 உணவு லொறிகளும் அழிக்கப்பட்டன. 16 இந்தியர்கள் மற்றேரிடத்தில் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. பூஞ்ச் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் பின்வாங்கிவருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டது.

ராணுவ முகாம் தாக்கப்பட்டது

கார்கில் பகுதியில் இந்திய ராணுவத் தலைமைக்காரியாலயம் தாக்கப்பட்டு, பல துருப்புக்கள் கொல்லப்பட்டன. 4 பாலங்கள் அழிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

ஊரிபகுதியில் 4 பெற்ரோல் குதங்கள் அழிக்கப்பட்டு, 20 இந்தியத் துருப்புக்கள் கொல்லப்பட்டனராம்.

பெரும் சண்டை

ஸ்ரீநகருக்கு மிக அண்மையில் பெரும் சண்டை நடைபெற்று வருவதாயும், காயமடைந்த ஏராளமானோர் ஆஸ்பத்திரிகளில் கூடிவருவதாயும், இந்தியர்கள் 550 ஏவுகணைகளை பீரங்கி மூலம் பொழிந்தார்கள் என்றும் 'காஷ்மீரின் குரல்' மேலும் அறிவித்தது.

உதவுக

காஷ்மீரில் 50 லட்சம் மக்கள் இந்தியக் கொடுங்கோண்மையிலிருந்து விடுதலைபெற போராடிவருகிறார்கள். இந்தப் போராட்டத்தில் முஸ்லிம் நாடுகள் தார்மீக உதவியும், சாதன உதவிகளும் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றது 'காஷ்மீரின் குரல்'

உஸ்மானியா வேலைநிறுத்த முடிவு

புதுடில்லி, ஆக, 17

உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் வேலைநிறுத்தம் முடிவடைந்தது. இதற்காக துணைத் தலைவர் மாணவர்களைப் பாராட்டினர். அவர்கள் மீது பழிவாங்கப் படமாட்டாது என்றும் அவர் கூறினர்.

250 பேர் விடுதலையாவர்

சென்னை, ஆக. 17

தமிழ் நாட்டில் மொழிக் கலகத்தை அடுத்து கைது செய்யப்பட்டவர்களில் இடது சாரி கம்யூனிஸ்டுகள் நீங்கலாக, 250 பேரை விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டிருப்பதாத அறிவிக்கப் பட்டது. 80 இடதுசாரி கம்யூனிஸ்டுகள் மட்டுமே இனி காவலில் இருப்பார் என்று திரு. ராப்கிஷன் கூறினர்.

சீக்கியர் மீது பாரபட்சம்

அமிர்தசரஸ், ஆக. 17

சீக்கியர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற புகாரை ஆராய கமிஷன் ஒன்றை நியமிக்கலாம் என பஞ்சாப் முதல்வர் திரு. ராப்கிஷன் கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாராட்டு

பம்பலப்பிட்டி, செவ்.

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

"அரசாங்க எழுது வினைஞர் சங்கம் நடத்திய மொழி வழக்கில் கைமாறு கருதாது சங்க உறுப்பினரின் பொது நலம் கருதி அயராது உழைத்து சங்கத்திற்கு வெற்றியும் பொது உறுப்பினர் உரிமைகட்கு மதிப்பும் தேடித்தந்த சங்கத்தின் வழக்கறிஞரான திரு. செ. அரங்கநாதன் 'முடிக்குரிய வழக்கறிஞர்' ஆக நியமிக்கப்பட்டதை அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் மோட்டார் போக்கு வரத்துக் கிளை பாராட்டுவதுடன் தன் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது."

நடை பஜனை

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 25-ம் திகதி நடைபெறும் நல்லூர்த்தேர்த் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சூராவத்தை முத்துமாரிஅம்மன் கோவிலிலிருந்து 24-ம் திகதி அதிகாலை 4 மணிக்கு நடை பஜனைக் கோஷ்டியினர் மயிலணி, சுன்னாகம், இணுவில், கோண்டாவில், கொக்குவில், தட்டாதெரு மார்க்கமாக அரசடி வீதிவழியாக கோயிலைச் சென்றடையும்.

மணல் திருட்டு

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம்திருவடிநிலைகரையோரத்தில் களவாகமணல் அள்ளுவோர் தொகை தினமும் அதிகரித்து வருகிறது. மணல் அள்ளுவோர் புதிய முறையொன்றை கையாளுவதாகத் தெரியவருகிறது. இரவு இரவாக மணலை அள்ளிப் பக்கத்தேயிடுக்கும் தங்கள் சொந்தக்காணியில் குவித்து பின்னர் தமக்கு வேண்டிய நேரத்தில் தேவைக்கு ஏற்றதுபோல் அள்ளுகிறார்களாம்.

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை நகரசபையின் உபதலைவராக தொடர்ந்து மூன்றுவதுதடவையும் திரு வே. நாகநாதன் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்,

நகரசபைத்தலைவர் திரு நடராசா தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில்பருத்தித்துறை மார்க்கட்டில் காய்கறிக் கடை ஒன்றை நிறுவும்படி சந்தை இலாகாவைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதுடன் நகரசபைக்கு மின்சாரப் புனருத்தாரண வேலைகளுக்காக அரசாங்கம் கடனுக வழங்க அங்கீகரித்துள்ள ரூபா 88 ஆயிரத்தையும் அவர்கள் நிபந்தனைகட்கிணங்கப் பெற்றுக் கொள்வதெனவும்முடிவுசெய்யப்பட்டது.

தமிழாசிரியர் சங்கம்

வவனியா, செவ்.

மூல்லைத்தீவுத் தமிழாசிரியர் சங்க வடுடாந்தக்கூட்டம் அண்மையில் முல்லைத்தீவு சைவவித்தியாசாலையில் சங்கத்தலைவர் திரு. பெ. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர் சங்கத்தின் அத்தியாவசியம் பற்றியும் சென்ற வடுடத்தில் ஆசிரிய சங்கத்தின் சேவைகளைப் பற்றியும் தலைவர் விளக்கமாகக் கூறினர்.

திரு. ச. முத்தையா, திரு. வே. நமசிவாயம் ஆகியோரினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின. பின் வரும் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: ச. முத்தையா, காரியதரிசி: க. சங்கரப்பிள்ளை, தனாதிகாரி: பெ. மயில்வாகனம், உபதலைவர்கள்: வே. நமசிவாயம், த. சதாசிவம், கே. வி. செல்வத்துரை, உபகாரியதரிசி: தி. அமிர்தநாதர். நிர்வாக சபை அங்கத்தவர்களாக: தே. தொம்மையப்பு. சி. சிவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கணக்காளர்: க. தங்கராசா,

சித்தி பெற்றனர்

தொல்புரம், புதன்

கொழும்பு விவேகானந்த சபையாரால் 1965-ம் ஆண்டு நடாத்தப்பட்ட அகில இலங்கைச் சைவ சமயபாடப் பரீட்சையில், தொல்புரம் மத்திய சன சமூகநிலைய வாசிகசாலை மாணவ மாணவிகள் ஏழு பிரிவிலும் 25 பேர்கள் பங்கு பற்றினர்: இவர்களில் மொத்தம் 12 மாணவர்கள் "இரண்டாம் பிரிவில்" சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

ஆரம்பபிரிவு 1: மு, பரிமளகாந்தி, அ, கமலாதேவி, வே. ஞானச்செல்வன்.

கீழ்ப்பிரிவு 1: கி. நடராசா.

கீழ்ப்பிரிவு 2: இ. யதுகுலராணி, இ. இரத்தினேஸ்வரி, பூ. அரியசோதி, பூ. தனலட்சுமிபம்மா, த. திலகவதி.

மேற்பிரிவு 2: அ. ஸ்ரீபதி, மா. புவனேந்திரன், க. கோமதிதேவி.

நாலர்

கெய்ரோ, ஆக, 17

ஏமன் விஷயமாக சவூதி அராபிய மன்னர் பைஸலுடன் பேசும் பொருட்டு ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர் நபஸர் அரேபியாவுக்கு விஜயம் செய்வார்,

REGAL--JAFFNA
NOW SHOWIG!
Vincent Price
In
DIARY of A MADMAN
(Technicolor)
ADULTS ONLY

இடமாற்றங்கள்

சுழிபுரம், செவ்வாய்

வடமாகாணத்தில் கடமையாற்றும் கிராமசேவையாளர்கள் சிலர் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் செய்யப்பட்ட கிராம சேவையாளர்கள் பெயர்கள் வருமாறு:

திரு பி. இராசகதிரவேல் தற்போது கடமையாற்றும் கண்டாவளை இடத்திலிருந்து நெடுந்தீவு மேற்கிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். வி. நடராசா நெடுந்தீவு மேற்கிலிருந்து வல்வெட்டிக்கும், என். சந்திரன் வல்வெட்டியிலிருந்து கண்டாவளைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். எம். ஒப்பிலாமணி மூளாயிலிருந்து மாதகல் கிராமத்துக்கு மாற்றப்பட்டார். ஏ. முருகேசு மாதகலிலிருந்து மூளாய்கிராமத்துக்கும், பி. சொக்கலிங்கம் கீரிமலையிலிருந்து உயிலங்குளத்துக்கும், என். கணபதிப்பிள்ளை உயிலங்குளத்திலிருந்து கீரிமலைக்கும் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், புதன்

நவாலி, சங்கரத்தை பஸ் பிரயாணிகள் யாழ்ப்பாணத்திற்குப் போகவும் திரும்பவும் போதியளவு பஸ் இல்லாமையால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். மூளாயிலிருந்து புறப்படும் பஸ் மூளாயிலேயே 'நிரம்பி'விடுவதால் சங்கரத்தை, நவாலி மக்களை ஏற்றிச் செல்லாது சென்றுவிடுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பும்பொழுதும் மூளாய் வழியே செல்லும் பஸ்ஸில் வட்டுக்கோட்டை, மூளாய், காரைநகர் மக்கள் ஏறுவதால், நவாலி, சங்கரத்தைப் பிரயாணிகள் பஸ் இல்லாது வேறு வழியே செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகிவிடுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

பயிற்சி வகுப்புகள்

படுத்தித்துறை, செவ்.

யாழ் மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளின் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான விடுமுறை காலப் போதனை பயிற்சிவகுப்புகள்கடந்தமூன்று தினங்களாக படுத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மண்டபத்திலும், விளையாட்டரங்கிலும் நடைபெற்றன.

பத்து வட்டாரங்களிலும் இருந்து ஆண்களும், பெண்களுமாக சுமார் 40 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

உடற்றுறைக் கல்விப்பரி சோதகர்களான திரு ஆர். சிவரத்தினம், திருமதி ஆர். குகதாசன்.சுகாதாரக் கல்வி விரிவுரையாளர் திரு எஸ். பொன்னம்பலம் ஆகியோர் போதனை வகுப்புக்களை நடாத்தினர்.

திருமதி றெஜி பெரரா பெண்களுக்கான வலைப் பந்தாட்டப்பயிற்சிகளை நடத்தினர்.ஆண்களுக்கு ஹாட்லிக்கல்லூரி விடுதியிலும் பெண்களுக்கு மெதடிஸ்தயப்பட்டன.

வரவேற்பு ஏற்பாடு

படுத்தித்துறை, செவ்.

இம்மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்உள்நாட்டமைச்சர் திரு. டபிள்யு. தகநாயக்கா அன்று மாலை உடுப்பிட்டித் தொகுதிக்கும் விஜயம் செய்வார்.

உடுப்பிட்டி எம். பி. திரு, மு. சிவசிதம்பரம் தலைமையில் பொதுமக்கள் சார்பில் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் அமைச்சருக்கு மாபெரும் வரவேற்பொன்றளிக்க ஏற்பாடாகி இருக்கின்றது.

திரு. தகநாயக்கா கல்வி அமைச்சராக இருந்தகாலத்திலேயே இக்கல்லூரியின் தரம்உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திரு. தகநாயக்கா கடுப்பா நீர்த்தடை சட்டத்தை ரத்துச்செய்தமை குறித்து வரவேற்பில் நன்றி தெரிவிக்கப்படும் எனவும் நம்பப்படுகிறது.

அவலநிலை

மன்னார், செவ்.

முருங்கன் பகுதியிலுள்ள பொதுச்சந்தை, புகையிரத நிலையம், கடைக்தெடு இவைகளுக்கு சமீபமாக உள்ள பொது மலசலகூடம் பல மாத காலமாக திருத்தப்படாமையினாலும், கடந்த சூறாவளியினால் சேதமுற்றபடியினாலும் வெடிப்புகள் ஏற்பட்டு இடியும் தறுவாயில் இருக்கின்றது. வாசல் பகுதி முற்றாக இடிந்து விழுந்து கிடக்கின்றது. இதனருகில் செடிகளும் பாம்புப் புற்றுகளும் கணப்படுகின்றன. முருங்கன் பகுதியில் மின்சாரமில்லாதபடியினால் இரவு நேரங்களில் பலசலகூடத்துக்குப் போகிறவர்கள் உயிருக்கு ஆபத்து நேருமோ என அஞ்சவேண்டியிருக்கின்றது. இதுவரை இந்த மலசல கூடம் திருத்தப்படவில்லை எனத் தெரிகிறது.

ஆரோகண திருநாள்

மன்னார், செவ்.

பரிசுத்த தேவதாயார் பரலோகத்து ஆரோகண மான தினத்தைக் கொண்டாடுமுகமாக மடுஆலயத்தில் நடைபெற்ற ஆகஸ்ட் திருவிழா ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவுற்றது. நாட்டின் பலபாகங்களிலும் இருந்து ஏராளமான யாத்திரீகர்கள் வந்திருந்தனர். திருவிழாவிற்கு முன் சிலதினங்கள் மழை பெய்தபடியினால் மடு யாத்திரீகர்கள் பாதிக்கப்பட்டு மடு ஆலயத்திலும் சுற்றுடலிலுமுள்ள கட்டங்களிலும் தங்கினர்கள். ஊர்காவற்றுறை சென். மேரிஸ் ஆலயத்திலும் தேவதாயாரின் ஆரோகணத் திருநாள் பூசையை கட்டளைக்குருவர் வண பிதா எம். ஜே. மரியாம்பிள்ளை ஒ. எம். ஐ. ஒப்புக்கொடுத்தார்.

மகளிர் விடுதியிலும் தங்குவதற்கான வசதிகள் செய்

வெற்றிகரமான 2-வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் விஜயா மொடேர்ன்
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (பதுளை)
விஜிதா தீவொளி கல்யாணி
(ஹட்டன்) (நுவரெலியா) நாவலப்பிட்டி)
லக்ஷ்மி அயன்
(இரத்தினபுரி) (மன்னர்)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
நீதிக்குப் பின் பாசம்

நம்பிக்கைக்கு
துரிதத்துக்கு
கண்காணிப்புக்கு
பெட்டா பார்மஸி
23, டாம் வீதி, : கொழும்பு.
தொலை பேசி: 7213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விளையாட்டரங்கு

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்வெட்டித்துறை உதய சூரியன் உல்லாசக் கடற்கரையில் பட்டினசபைத் தலைவர் திரு. க. சபாரத்தினம் தலைமையில் சிறுவர் விளையாட்டரங்கம் வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

திரு. விசுவநாதன் பேசுகையில், வருங்கால சமுதாயம் சிறப்புற்று விளங்க வேண்டுமானால் இளைஞர்கள் திடகாத்திரமாக இருக்க வேண்டுமென்றும் இளைஞர்கள் விளையாட்டுகளில் பங்கு பற்றுவதுபோல் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியமற்றும் விஷயங்களிலும் கவனம் எடுத்தல்வேண்டுமென்றும் சொன்னர். இறுதியில் கழகத்தலைவர் திரு. ரி. வேலுப்பிள்ளை நன்றி கூறினர்.

விளையாட்டுப்போட்டி

மல்லாகம், செவ்வாய்

கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி வருகிற சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டுப்போட்டிகள் திரு. க. நடேசன் தலைமையில் நடைபெறும்,

மந்திரியிடம் முறையீடு

ஊர்காவற்றுறை, செவ்.

புங்குடுதீவு, வல்லன் வட்டாரத்தில் உள்ள ஒழுங்கை, வீதிகள் போக்குவரவுக்கு ஏற்றதாய் இல்லாது இடுப்பதை அமைச்சர் திரு. திருச்செல்வத்துக்கு அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரும் தீவுப்பகுதி எம். பியும் சம்பந்தப்பட்ட வட்டாரத்திற்கு அண்மையில் விஜயம் செய்து வீதிகளின் அவலநிலையை நேரில் பார்த்துச் சென்றனர்.

தீவுப்பகுதிக்கு வைத்தியசாலை

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதியில் கூட்டுறவு வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதற்கான அமைப்புக்கூட்டம் ஒன்று கரம்பனி லுள்ள வைத்தியசாலைக் கட்டடத்தில் இம்மாதம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவும், சட்டதிட்ட ஒழுங்கு ஆராயப்படுதலும் நடைபெறும் என அறியப்படுகிறது. ——

புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

நவாலி கொத்துக்கட்டி சனசமூக நிலய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. என். இராசதுரை. உபதலைவர்:- திரு. எம். ஜெயரத்தினம். செயலாளர்:-திரு.சி. தம்பிராசா, உப செயலாளர்:- திரு.என். மகாதேவா, பொருளாளர்:- திரு. எஸ். நவரத்தினம் ஆகியோரும் ஐந்துபேரடங்கிய நிர்வாகசபையினரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வருடாந்தப் போட்டி

உடுப்பிட்டி, செவ்.

பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழக பொதுக் கூட்டம் பருத்தித்துறை பட்டினசபைத்தலைவர் திரு. என். நடராசா தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. மா. இரத்தினசோதி பேசுகையில், "1964-ம் ஆண்டு நடைபெற்ற மல்யுத்த, ஆணழகன் போட்டிகளிலும் தலையணைச் சண்டையிலும் பார்க்க 1965-ம் ஆண்டுக்குரிய நிகழ்ச்சிகளை மேலும் சிறப்புடன் நடாத்துவதற்கு இப்பொழுதிலிருந்தே முயற்சிகள் செய்யப்பட்டு வருவதாகவும் இம்முறை போட்டிகள் பருத்தித்துறைப் பகுதிக்கு மாத்திரமன்றி வடமராட்சிப் பகுதி முழுவதற்குமே நடைபெறுவது குறிப்பிடத்தக்கது என்றும் கூறினர்.

மார்கழி மாதத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளுக்கு வீரர்களைத் தயார் செய்துவரும் உடற்பயிற்சி ஆசிரியர் திரு. வி. நடராசாவும் பேசினர்.

பட்டினசபைத் தலைவர் திரு. என். நடராசா பேசுகையில் இளைஞர்களுக்கு முன்னேற்றம் தரக் கூடிய முயற்சிகளை ஊக்குவிப்பதில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகக் கூறினர்.

செயலாளர். திரு. வி. மாணிக்கராசா நன்றி கூறினர்.

கலைக்கழகபோட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு நடாத்தும் 1965-ம் ஆண்டுக்கான தமிழ் நாடகப் போட்டியில் பங்குபற்றுவோர் தமது நாடகப் பிரதிகளை அடுத்த மாதம் முதல் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி அறிய விரும்புவோர் இலங்கை கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

'இலங்கையில் போதியதொழில் நுட்பக்கல்லூரிகள் வேண்டும்'

வரவேற்பு விழாவில் ஜேர்மன் ஸ்தானிகர் பேச்சு

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி ஐக்கிய கலாசாலை மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் கலாசாலை மண்டபத்தில் ஜேர்மன் ஸ்தானிகருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவின்போது தலைமைவகித்துப் பேசிய உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் வடபகுதியில் உள்ள காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையையும், காங்கேசன் துறை துறைமுகத்தையும் விருத்தி செய்வதற்கு ஜேர்மன் மேலும் பெரிதும் உதவவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஜேர்மன் குடியரசு இலங்கையிலிருந்து மாணவர்களைப் பொறியியல்துறையிலும், தொழில் நுட்பத்துறையிலும் இலவசக் கல்வி கொடுத்து பயிற்றுவிக்கின்றது. வருடாவருடம் 25, 30 மாணவர்களுக்கு ஜேர்மனியில் இலவசக் கல்வி ஊட்டப்பட்டு அவர்கள் மறுபடியும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர். எனவே மேலும் பல மாணவர்களை இலவசக் கல்வி மூலம் பயிற்சி கொடுத்து இலங்கையைத் தொழில்நுட்பத் துறையில் சிறந்த ஒரு நாடாக விளங்குவதற்குப் பெரிதும் உதவுமாறு கேட்டுக்கொண்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், கடந்த அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி இவ்வருடம் ஜி. சி. ஈ. வகுப்பில் இருந்துவிட்டு சில மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாதுவிடுகின்றனர்.

அடுத்ததாக பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜேர்மன் ஸ்தானிகர் கௌரவ டாக்டர் ஷார்பட் ஸ்கார்போல் பேசுகையில், தமது நாட்டின் உதவியின் மூலம் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையையும், துறைமுகத்தையும் விருத்தி செய்வதற்கு ஆக வேண்டிய முயற்சிகளை தான் கடைப்பிடிக்கப்போவதாகக் கூறினர். அவர் மேலும் கூறுகையில், தொழில் நுட்பத்துறையிலும், பொறியியல் துறையிலும் கூடிய தொகையினையுடைய மாணவர்கள் இலங்கையில் இருந்தால், இலங்கை மக்களைப் போன்ற சுறுசுறுப்பானவர்களுக்கு மிகவும் உதவும் என்று கூறினர். இலங்கையில் போதிய தொழில் நுட்பக் கல்லூரிகள் இருப்பது அவசியம் என்றார். தனது நாட்டின்மூலம் இலங்கையிலுள்ள பொது நூல் நிலையங்களுக்கு இலவசமாக புத்தகங்கள் அளிப்பதற்குச் சிபார்சு செய்கின்றேன் என்று கூறினர். அதையடுத்துப் பேசிய அகில இலங்கை வேலைவேண்டுவோர் கழகத் தலைவர் திரு. கே. ரி. இராஜசிங்கம் பேசுகையில், இலங்கை மக்கள் ஜேர்மனிய மக்களுடைய அன்பையும், சிநேகமனப்பான்மையையும் பெரிதும் விரும்புவதாகக் கூறினர். அதன்பின் ஐக்கியகலாசாலை முதல்வராகிய திருவாளர் எஸ். இரத்தினசிங்கம், திரு. ஷார்பாலுக்கு கலாசாலையின் செயல்முறைகளை எடுத்துக்கூறி, சபையோருக்கும், விருந்தினர்களுக்கும் நன்றியுரை கூறினர்.

வரி விளம்பரம்

தேவை

சிங்கப்பூர், 19, சிலோன் ரோட்டிலிருக்கும் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயத்திற்கு ஒரு தராதரம் பெற்ற பிராமண அர்ச்சகரும் உதவிப் பிராமண அர்ச்சகரும் தேவை, அர்ச்சகருக்கு மாதாந்தச் சம்பளமாயுள்ள 65 வெள்ளியும் தவிர வசிப்பதற்கு இலவச வீடு, தண்ணீர், விளக்கு ஆகிய வசதிகளும் அளிக்கப்படும். உதவி அர்ச்சகருக்கு சம்பளம் 60 வெள்ளியும் மேற்கூறிய வசதிகளும் அளிக்கப்படும், பிரயாணச்செலவும் கொடுக்கப்படும், 25-8-65 க்கு முன் மு. ஞானப்பிரகாசம், தலைவர், சைவ ஆசிரிய சங்கம், பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு கடிதமூலம் விண்ணப்பிக்கவும். 786

சுலபமாக நெய்யக்கூடிய தறிகளில் நெய்வதற்குஆண்கள் தேவை. தங்கும் வசதி உண்டு, குறிப்பிட்ட தொகைக்கு மேல் வேலை செய்தால்கூலியுடன் போனசும் கொடுக்கப்படும். கலாநிதி இன்டஸ்றி, 115, ஆனந்தன்வடலி ரோட், அரியாலை, யாழ்ப்பாணம், 788

திறமையான ஒருசோடி மேசனுக்கும், இரு கூலியாட்களுக்கும் வேலைதேவை. வ. கந்தசாமி, பெ.ச. கடையடி, மாதகல். 782

WANTED

Islandwide organisation requires storekeepers security Rs 3000/- Salary Rs. 150/- Cashiers security Rs 2000/- salary Rs. 125/- Typists security Rs 1000/ salary Rs 75/- Advertiser 777 C/o Eelandu 777

புதுடில்லி, ஆக. 17

சமய சந்தர்ப்பத்தைக் கருதி, சுதந்திரக்கட்சி கட்சி ஒப்பந்தத்தை ஆதரிக்கும் என அறிவிக்கப்பட்டது.

புதன் 18-8-65

கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 சைவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கவிதை அஞ்சலி.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்தஇசை.

விற்பனைக்கு

வூல்ஸிலி சீனியர் தண்ணீர் இறைக்கும் பம்பு விற்பனைக்கு உண்டு: மிகச் சிறந்த நிலைமையில்இருக்கிறது. 26-8-65 திகதிக்கு முன் கீழ்க்கண்ட முகவரியில் பார்வையிடலாம். க, நிற்சிங்கம், செம்மணி ரோட், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம், 787

A 55 "ஒஸ்ரின் கேம்பிரிச்" சாமான்கள் ஏற்றும் வான் 33 சிறீ ஐயாயிரத்து தொடர்பிலக்கம் "ஓரிஜினல்பிஸ்டன்" நான்கு டயர்களும் பற்றறியும் புதியது. எதுவித பழுதும் கிடையாது. ச. சுப்பிரமணியம், உடுவில் கிழக்கு, சுன்னகம். 785

சுன்னகம்—சந்தை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் சமீபமாக 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல. 789, ஈழநாடு மேற்பார்த்து, 789

மன்னர் மாந்தை வடக்கில் குளக்கட்டுக்கருகாமையில் திறமான நீர்ப்பாசன வசதியுள்ள 18 ஏக்கர் வயல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கணேசசங்கரி, 44/4, கொலிச்வீதி நீராவியடி, யாழ்ப்பாணம் அல்லது இராமசாமி கவுண்டர், இலுப்பைக்குளம், உயிலங்குளம். 790

கடை கொமிஷனுக்கு

கன்னதிட்டி ரோட் மணிக்கூட்டுச் சந்தியிலுள்ள 5-ம் இலக்க தேநீர்க்கடை கொமிஷனுக்குக் கொடுக்கப்படும். எஸ். செல்லத்துரை, 59, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம், 791

வைத்தியம்

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, நீட்டு இறைத்தல், புத்திரப்பேறு. தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 730

கள்ளநோட்டு வழக்கு விசாரணை

மன்னர், செவ்.

கள்ளநோட்டு வழக்கு மன்னர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் திரு. ஓ. எல். எம். செனிவரத்தினு முன்னிலையில் மீண்டும்நாளை புதன்கிழமை காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இவ்வழக்கில் முத்துக்கிருஷ்ணன், சூரியபெருமா, ஏ, மகேஸ் ஆகியோர் மீது அடம்பனைச் சேர்ந்த எஸ். பாலசுந்தரம் என்பவரை ஏமாற்றி மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 1-ம்எதிரிசார்பில் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ஏ. அன்ரனியின் அனுசரணையுடனும், 2-ம் எதிரியின் சார்பில் திரு, ஜே. வி. பி. செருபிம், திரு, எஸ். சீமான்பிள்ளையின் அனுசரணையுடனும், 3-ம் எதிரியின் சார்பில் திரு. வி. அழகக்கோனும் ஆஜராவார்கள்,

மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜேர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents :
PHONE : 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டின் பல பகுதிகளிலும் பெரும் மழை

மலைநாட்டுப் பகுதியில் அநேக மண்சரிவுகள்

கொழும்பு, திங்கள்

நாட்டின் சகல பகுதிகளிலும் பெருமழை பற்றிச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. மலைநாட்டுப் பகுதியில் பல இடங்களில் சிறிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

வங்காளக்குடாக்கடலில் உருவாகியுள்ள காற்று அமுக்கம், வடக்குத்திசை நோக்கி நகர்ந்துவருவதாக தோன்றுகிறதென காலநிலை அறிவிப்புக்கூறுகிறது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை நீடிக்கும் என்றும் அது கூறுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் வட்டவளையில் 7.10 அங்குல மழைபெய்திருக்கிறது. திருக்கோணமலையில் 3.06 அங்குலமும், வவனியாவில் 2.06 அங்குலமும், மட்டக்களப்பில் 1.24 அங்குலமும், யாழ்ப்பாணத்தில் 1.16 அங்குலமும், இரத்தினபுரியில் 4.40 அங்குலமும், அநுராதபுரத்தில் 4.40 அங்குலமும் மழை பெய்திருக்கிறது.

இன்று கொழும்பில் சூரிய வெளிச்சமின்றி மப்பும் மந்தாரமுமாய் இருந்தது.

தரம் குறைவு?

யாழ்ப்பாணம், செவ். களுத்துறையில் உற்பத்தி செய்யப்படும் இலங்கைச் சாராயம் தற்போது யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குதட்டுப்பாடாக இருக்கின்றது. இங்குள்ள சாராயத் தவறணைகளில் இதற்குப் பதிலாக கல்லோயா சாராயம் விற்பனவு செய்யப்படுகின்றது. கல்லோயா சாராயம் தாராளமாகக் கிடைத்த போதிலும் இலங்கை சாராயத்தின் தரத்திற்குக் குறைவானதாக இருக்கின்றது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அரசியல் நடவடிக்கைகளுக்காக நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள்

18-ம் திகதி விசாரணை

கொழும்பு, திங்கள்

அம்பாறையில் அரசியல் நடவடிக்கை காரணமாக ஒரு ஆசிரியர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது குறித்து கல்விஇலாகா வருகிற 18-ம் திகதி முதலாவது விசாரணையை ஆரம்பிக்கும்.

இதுவரை 100 ஆசிரியர்கள் தற்காலிகமாக நிறுத்தம்செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும், மற்றும் 200 பேர் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கைஎடுக்கப்படக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு கேட்கப்பட்டிருப்பதாயும் கல்விஇலாகா வட்டாரங்கள் கூறின. தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் எல்லா ஆசிரியர்களும் தங்கள்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்திருக்கிறார்கள்.

யு. என். பி.

கொழும்பு மாநகரசபையின் எல்லா தொகுதிகளிலும் போட்டியிடும்

கொழும்பு, திங்கள்

வருகிற டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் கொழும்பு மாநகரசபையின் 47 தொகுதிகளிலும் யு.என்.பி. போட்டியிடும். கண்டி, காலி, நீர்கொழும்பு, ஆகிய மாநகரசபைகளைக் கைப்பற்ற முடியும் என கட்சி எதிர்பார்க்கிறது. அடுத்த ஆண்டு மாநகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்படவிருக்கும் இரத்தினபுரி, கம்பளை ஆகிய இரு ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்ற முடியுமென யு. என். பி. எதிர்பார்க்கிறது. புதிய பட்ஜட்டைத் தொடர்ந்து, கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றும் சாத்தியம் நன்றாய் இருப்பதாகக்கட்சியின் பிரபல அங்கத்தினர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை

இந்தியாவைத் தழுவியே இருக்கவேண்டும்

- உடுப்பிட்டி எம். பி.

யாழ்ப்பாணம், செவ்வாய்

''இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கையைத் தழுவியதாக இருக்கவேண்டும்'' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்று முன்தினம் மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேருஜி வாலிபர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் பண்டு தொட்டு இருந்துவந்த உறவு பற்றி விளக்கிக் கூறிய திரு சிவசிதம்பரம் சமீபத்தில் இந்தியா மீது சீனா தாக்குதல் நடத்திய சமயத்தில் இலங்கையில் அப்போது ஆட்சிபீடத்திலிருந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கம் 'நடுநிலைமை'க் கொள்கை என்ற போர்வையில் 'சமாளித்து' நடந்து கொண்டதென்றும் இது இந்தியாவுக்குச் செய்த துரோகமென்றும் கூறினார்.

''இந்தியாவுக்கு ஏற்படும் கஷ்டங்கள் இலங்கைக்கும் ஏற்படும். இந்தியாவின் பாதுகாப்புத்தான் இலங்கையின் பாதுகாப்பு. இதை இலங்கை என்றும் மறந்து விடக்கூடாது'' என்று சிவசிதம்பரம் கூறினார்.

''இலங்கையின் எல்லை இந்துசமுத்திரத்தில் இல்லை. அது இமயமலையில்தான் இருக்கிறது. இமயமலையைத் தாண்டி இந்தியாவுக்கு வரும் ஆபத்து இலங்கைக்கு வந்தே தீரும். எனவே இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கையைத் தழுவியே இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையும் இருக்கவேண்டும்'' என்று திரு. சிவசிதம்பரம் கூறினார்.

'மொழித்தொழிற்சங்கபிரதிநிதியை செனட்டராக்குக'

தமிழரசுக் கட்சிக்கு கோரிக்கை

திருகோணமலை, திங்கள்

மொழிவழித் தொழிற்சங்கங்களின் பிரதிநிதி ஒருவரையே இம்முறை செனட் சபைக்கு செனட்டராகத் தெரிவுசெய்யுமாறு இங்குள்ள மொழிவழித்தொழிற் சங்கக் கூட்டணியின் கிளைகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடத்தை வேண்டியுள்ளது என அறியப்படுகின்றது.

இலங்கைத் தமிழுரிமைப் போராட்டத்தைத் தீவிரமாக்குமுகமாகவும் தமிழ் பேசும் தொழிலாளர்களின் எதிர்காலம் சிறந்து விளங்க வர்க்க ரீதியான தொழிற் சங்கங்கள் உதவ முடியாதென்ற அசையாத நம்பிக்கையினாலும்தான் மொழிவழித் தொழிற் சங்கங்கள் தோன்றினவென்றும் ஆகவே தமிழரசுக்கட்சியின் சகல நடவடிக்கைகளுக்கும் தமிழ்பேசும் தொழிலாளர்களின் ஆதரவைப் பரிபூரணமாகப் பெற்றுக் கொடுக்கும் மொழிவழித் தொழிற்சங்கங்களின் கூட்டணியைச் சேர்ந்த ஒருவரை இம்முறை செனட்டராகத் தெரிவு செய்வது சாலவும் பொருந்தும் எனவும் அவ்வேண்டுகோளில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

யாரை மொழிவழித் தொழிற்சங்கங்களின் சார்பில் செனட்டராக நியமிப்பது என்ற விடயம் வருமிடத்து, இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகத் தலைவர் திரு. க. சோ. செல்லத்துரையின் பெயரை சிபார்சு பண்ணியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

எஜமானி துரத்த சிறுமி ஓடினாள்

காங்கேசன்துறை, திங்கள்

ஒரு வீட்டில் வேலைக்கிருந்த 8 வயதுச் சிறுமி ஒருத்தி வீட்டு எஜமானியின் அடி உதையினால் வீட்டிலிருந்து வெளியேறி தெருவில் ஓட, வீட்டு எஜமானி அந்தச் சிறுமியை 3 மைல் தூரம் துரத்தியபின் சிறுமி புகையிரத நிலையத்தில் தஞ்சமடைந்த சம்பவம் அநுராதபுரத்தில்நடைபெற்றுள்ளது அனுராதபுரக் காட்டுக்கந்தோரில் கடமையாற்றும் ஓர் அதிகாரியின் வீட்டில் வேலைசெய்யும் 8 வயதுடைய கமலாவதி என்னும் சிறுமிதான் அவள். சிறுமியை துரத்திவந்த எஜமானி ரயில்நிலையத்திலும் தாக்க முயற்சிக்கையில் ரயில்நிலையத்திலிருந்தஉதவி ஸ்டேசன்மாஸ்டர் திரு. வில்லியம் அவளைப் பாதுகாத்து பின் பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

பத்திரிகை காகிதம் விலை குறையும்

கொழும்பு, திங்கள்

பட்ஜட்டில் இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டது காரணமாக சிலரக பேப்பர்களின் விலை விரைவில் வீழ்ச்சியடையும்என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக உபயோகிக்கப்படுவதான எழுதும், அச்சடிக்கும், படம்வரையும், நகல்எடுக்கும் பேப்பர்களின் இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகம் திருமலைத்துறைமுகத்தில் இயங்கிவரும் ஒரு தொழிற்சங்கமென்பதும் அதில் சுமார் 1400 பேர் உறுப்பினராக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. திரு. செல்லத்துரை தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழக இயக்க ஸ்தல அதிபராக திருமலையில் கடமையாற்றியிருக்கின்றார். சிங்களம் மட்டும் சட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இவர் மேற்படி தமிழகத் தலைவராக ஆரம்பகாலந்தொட்டு பணியாற்றி வருகின்றார்.

வடக்கு கிழக்கு விளையாட்டுக் கழகங்களின் கைப்பாந்தாட்டம்

திருகோணமலை, திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்துவதென திருகோணமலை 'நட்சத்திர விளையாட்டுக் கழகம்' தீர்மானித்துள்ளது. இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் சாம்பியன் குழுவிற்கு திருகோணமலை எம். பி. யால் அன்பளிக்கப்பட்ட 'மாணிக்கராசா கேடயம்' வழங்கப்படும். இரண்டாவதாகவரும் குழுவிற்கு (ரன்னர்ஸ்) திருமலை நகரசபைத் தலைவரால் அன்பளிக்கப்பட்டுள்ள 'சிவானந்தன் வெற்றிக் கிண்ணம்' வழங்கப்படும்.

இச்சுற்றுப் போட்டி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுமென நட்சத்திர விளையாட்டுக்கழகச் செயலாளர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

இவ்வாண்டிற்கான சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டுக்கழகங்கள் இம்மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளன.

கைப்பந்தாட்ட போட்டி

இம்மாதம் 21, 22 ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் 'நட்சத்திரக் கழக' தினவிழாவில் நட்சத்திரக் கழகக் குழுவிற்கும், உடுவில் 'ஸ்டார்' குழுவிற்கும் இடையே கைப்பந்தாட்டப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும்.

ஓடும் ரயிலில் மாணவர் மரணம்

வவனியா, திங்கள்

கொடிகாமத்திலிருந்து வவனியாசென்றுகொண்டிருந்த யாழ்தேவியில் பிரயாணம் செய்த 19 வயது மாணவர் ஒருவர் நொச்சிமோட்டை பாலத்தில் மோதுண்டு, அடிபட்டு, கீழே விழுந்து மரணமானார் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் இவர், புலோலி கிழக்கைச் சேர்ந்தவர் என்றும், அவரது பெயர் சத்தியமூர்த்தி என்றும் கூறப்பட்டது.

இவர் ரயிலில் படியில் நின்று பிரயாணம்செய்தபோது இவ்விபத்து ஏற்பட்டது.

48 மணி நேரத்தில் கொலை இல்லை?

கொழும்பு, திங்கள்

கடந்த 48 மணி நேரத்தில் எவ்விதக் கொலைச்சம்பவம் பற்றியும் பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்கப்படவில்லை.

வீடு திரும்பினர்

பருத்தித்துறை, திங்கள்

கடந்த மாதம் 28-ம் திகதியன்று கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது பஸ் வண்டியைவிட்டு இறங்கியும் தீடீர் பரிசோதனைக் குழுவினரின் காரில் இருந்து இறங்கி ஓடியும் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படும் கண்டக்டர் இராமசாமி கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினர். பருத்தித்துறை டிப்போவுக்குச் சென்ற அவருக்கு வேலை வழங்கப்பட்டிருக்கின்றது.

கண்டக்டரிடம் வாக்கு மூலம் ஒன்று பெறப்பட்டதாயும் அன்றைய தினம் நடைபெற்ற சம்பவம்பற்றிப் பூர்வாங்க விசாரணையொன்றை பிராந்தியக்காரியாலயம் நடாத்தும் எனவும் கூறப்படுகிறது.

போயா விடுமுறைக்கு திருச்சபை ஆதரவு

கொழும்பு, திங்கள்

கத்தோலிக்க திருச்சபை போயாதினத்தை பொது விடுமுறை யாக்குவதையும் பௌத்தர்களின் இழந்த உரிமையை மீண்டும் நிலைநாட்டுவதையும் ஆதரிக்கிறது என திருச்சபை அதிகாரி ஒருவர் கூறினார். ஆனால் ஞாயிற்றுக்கிழமையை ஒரு வேலைநாளாக ஆக்கும் விஷயம்பற்றி திருச்சபை உத்தியோகரீதியில் இறுதிநிலை ஒன்றை மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பாழ்ப்பாணம் செல்வகோவில் மேலை வீதி 21-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org